தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

*******

ஆணை எண். 048/2021
நாள். 24.11.2021

திருமதி. ப. மகேஸ்வரி,
மறைமலை நகர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்
மறைமலை நகராட்சி – எதிர்மனுதாரர்

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மறைமலை நகர், NH1 கண்ணகி தெரு, 9/26 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி. ப. மகேஸ்வரி அவர்களின் 10.03.2021 நாளிட்ட முறையீட்டு மனு 15.03.2021 அன்று இம்முறைமன்றத்தில் பெறப்பட்டு 48/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு, விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம் மறைமலை நகராட்சி ஆணையாளரின் வாக்குமூலம் மற்றும் அவர் அளித்த அறிக்கை ஆகியவை பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மறைமலை நகர், NH1 கண்ணகி தெரு, 9/26 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி. ப. மகேஸ்வரி என்பவர் தன்னுடைய 10.03.2021 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

i) “மறைமலை நகர் நகராட்சி பகுதி இலக்கம் 5இல், கண்ணகி வீதியில், மனை இலக்கம் 9/26இல், ஒரு குடியிருப்பு கட்டுவதற்கு 2009 ஆம் ஆண்டு நகராட்சியிடம் ஒப்புதல் பெற்றேன். மனையின் பரப்பளவு 912 சதுர அடிகளாகும். அதில், தரைதளம் மற்றும் முதல் தளம் கட்டுவதற்கு அனுமதி பெற்றேன். போதுமான நிதி இல்லாத காரணத்தினால்

தரைத்தளத்தோடு கட்டுமானத்தை நிறுத்திக்கொண்டேன். என்னுடைய குடியிருப்புக் கட்டிடத்தின் தோராய பரப்பளவு (Plinth Area) 632 சதுர அடிகளாகும் அதன் பயன்பாட்டுப் பரப்பளவு (carpet area) 520 சதுர அடிகளாகும். கட்டிடத்தை கட்டி முடித்த ஆண்டு 2013 ஆகும். இந்த கட்டிடத்திற்கு 01.04.2013 ஆம் நாள் முதல் சொத்துவரியாக ரூ.225/- நிர்ணயம் செய்யப்பட்டு அதன்படி சொத்துவரி செலுத்திவந்த நிலையில், மறைமலைநகர் நகராட்சி நிர்வாகம் 01.04.2014 ஆம் நாள் முதல், சொத்துவரியை ரூ.777/-என மறு நிர்ணயம் செய்து அதற்கான அறிவிப்பை 21.10.2017 ஆம் (முன் தேதியீட்டு) நாள் வழங்கினார்கள்.

ii) தமிழ்நாடு அரசு 2008 ஆம் ஆண்டு நகராட்சிப் பகுதிகளுக்கு பொது சீராய்வு அறிவித்து, அதன் அடிப்படையில், நகராட்சி நிர்வாகம் குடியிருப்புகளுக்கு அடிப்படை வரிதனை நிர்ணயம் செய்தது, அதனையடுத்து 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு, பொது சீராய்வு அறிவித்து, அடிப்படை வரிதனை உயர்த்த ஆணையிட்டது. பின்னர் அதனை நடைமுறைப்படுத்துவதை நிறுத்திவிட்டது. இந்த நிலையில் 2013 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புக்கு, நகராட்சி நிர்வாகம் 2014 ஆம் ஆண்டு ரூ.777/-என சொத்து வரியை உயர்த்தியது.

iii) எனது குடியிருப்பின் பயன்பாட்டு பரப்பளவு 520 சதுர அடிகளாகும். 2008 ஆம் ஆண்டு நகராட்சி தீர்மானத்தின்படி எனது குடியிருப்பு அடங்கியுள்ள பகுதி 5, கண்ணகி வீதி C மண்டலத்தில் வருவதாகும். C மண்டல குடியிருப்புகளுக்கு சதுர அடி ஒன்றுக்கு ரூ.1/- என நகராட்சியின் 2008 ஆம் ஆண்டு தீர்மானம் உள்ள நிலையில், 520 சதுரடி பயன்பாட்டுப் பரப்பளவு உள்ள எனது சொத்து (வீட்டிற்கு) ரூ.520/-க்குப் பதிலாக ரூ.777/- என நிர்ணயம் செய்துள்ளது ஆட்சேபகரமானது. எனவே, இதனை குறிப்பிட்டுக் காட்டி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83 (3) (i) (a) இன்படி, பயன்பாட்டு பரப்பினை கணக்கிட்டு வரி நிர்ணயம் செய்யாமல், தோராயமாக கணக்கிட்டு வரி நிர்ணயம் செய்ததை ஆட்சேபித்தும், அதனை மாற்றி அமைத்து சொத்துவரி நிர்ணயம் செய்திட நகராட்சி ஆணையரை 11.01.2018 ஆம் நாள் முதலாகக் கேட்டுக்கொண்டேன்.

iv) தரைத்தளம் மற்றும் முதல் தளம் கட்டுவதற்கு கட்டிட உரிமை பெற்றிருந்தபோதிலும் தரைத்தளம் மட்டுமே என்னால் கட்டப்பட்டது.

மேலும் சொத்துவரி விதிப்பதற்காக ஆய்வு செய்ததாக கூறும் நகராட்சி நிர்வாகம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 81 (6) இன்படி எனக்கு உரிய அறிவிப்பு ஏதும் வழங்கவில்லை. மேலும் பிரிவு 81 (4) இன்படி, ஆய்வு அறிக்கை (working sheet) வழங்கவில்லை.

v) 11.01.2018 ஆம் நாளிட்ட என்னுடைய ஆட்சேப மனுவினைத் தொடர்ந்து, 14.09.2018, 11.10.2018, 10.02.2019, 17.08.2019 என பல மனுக்கள் அனுப்பியும் முறையாக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

vi) இதன் தொடர்ச்சியாக தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6 (1) இன்கீழ் கேட்கப்பட்ட தகவலுக்கும் சரியான தகவல்களை வழங்கவில்லை.

vii) மறைமலை நகர் நகராட்சி ஆணையரை தொடர்ந்து கடிதம் மூலம் தொடர்பு கொண்டதின் காரணமாக 25.11.2019 ஆம் நாள் நேரடி விசாரணைக்கு நான் அழைக்கப்பட்டேன். ஆனால், எந்த விசாரணை அறிக்கையையும் எனக்கு வழங்கிடவில்லை.

viii) சொத்துவரி நிர்ணயிக்கும் போது, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 82 முதல் 84 வரையிலான சரத்துக்கள் வலியுறுத்தும் எதனையும் பின்பற்றாமல், கணிணியில், பதிவேற்றம் செய்துவிட்ட காரணத்தினால், அறிவிக்கப்பட்ட சொத்து வரியை செலுத்தும்படி என்னை நிர்பந்திக்கின்றார்கள்.

ix) 2013 ஆம் ஆண்டில் நான் செலுத்திய சொத்துவரியை தொடர பல முறை முயன்றும், அதனை பெற்றுக்கொள்ள மறுப்பு தெரிவிக்கின்றனர். எனது மனுவின் மீது இறுதி முடிவும் எடுக்கவில்லை என தெரிவித்து கீழ்கண்ட இனங்கள் மீது ஆணை வழங்க வேண்டியுள்ளார்.

- 01.04.2014 ஆம் நாள் முதல், முன் தேதியிட்டு அறிவிக்கப்பட்ட சொத்துவரி (ரூ.777/-) உயர்வினை இரத்து செய்து ஆணையிட வேண்டுகின்றேன்.
- எனது குடியிருப்பின் பயன்பாட்டு (Carpet Area) பரப்பினை சட்டம் சார்ந்து அளவீடு செய்து அதன் பரப்பினை அறிவிக்கை செய்ய வேண்டுகின்றேன்.

- 2008 ஆம் நகராட்சி சொத்துவரி பொது சீராய்விற்காக நிறைவேற்றப்பட்ட அடிப்படை சொத்துவரித் தொகையின் அடிப்படையில், சொத்துவரியை நிர்ணயம் செய்து 01.10.2017 ஆம் தேதியில் சிறப்பு அறிக்கையை தயாரித்து வெளியிட ஆணையருக்கு ஆணையிட வேண்டுகின்றேன்.

2. முறையீட்டு மனுதாரரின் மனு குறித்து இம்முறைமன்ற நடுவத்தின் 09.07.2021 நாளிட்ட அறிவிப்பாணையில் நகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. நகராட்சி ஆணையர் தனது 19.08.2021 நாளிட்ட கடித எண்.2015/2021/அ1 ல் மனுதாரரின் கட்டிடத்திற்கு விதிக்கப்பட்ட சொத்துவரி தொடர்பான புகார் மனுவிற்கு கீழ்க்காணுமாறு விளக்கம் அளித்துள்ளார்:-

i) திருமதி.ப.மகேஸ்வரி என்பவருக்கு சொந்தமான வார்டு எண்.5, எண்.9/26, என்.எச்.1, கண்ணகி தெருவில் அமைந்துள்ள கட்டிடத்திற்கு விதிக்கப்பட்ட பழைய சொத்துவரி அளவைவிட மிக குறைவாக இருந்த காரணத்தினால் மேற்படி கட்டிடத்தினை நேரில் ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி கட்டிடம் 700 சதுரடி கொண்ட குடியிருப்பு கட்டிடம் என்பதால் மேற்படி கட்டிடத்தின் பழைய சொத்துவரி அரையாண்டு தொகை ரூ.225/-க்கான சொத்துவரி விதிப்பு எண்.020/005/00312 ஐ நீக்கம் செய்து புதிதாக 700 சதுரடிக்கு சொத்துவரி விதிப்பு எண்.020/005/00823க்கு அரையாண்டு சொத்துவரி ரூ.777/- என நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கான சிறப்பு அறிவிப்பு (Special Notice of Property Tax. New Assessment or Amendment) 21.10.2017 ல் மனுதாரருக்கு முறையாக சார்பு செய்யப்பட்டுள்ளது.

ii) திருமதி.ப.மகேஸ்வரி என்பவருக்கு சொந்தமான கட்டிடத்திற்கு விதிக்கப்பட்ட பழைய சொத்துவரி கட்டிடத்தின் அளவைவிட குறைவாக இருந்த காரணத்தினால் மேற்படி கட்டிடத்தினை 19.10.2017ல் நேரில் ஆய்வு செய்யப்பட்டு கட்டிடத்தின் அளவுகளின் படி சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது.

iii) திருமதி.ப.மகேஸ்வரி என்பவருக்கு சொந்தமான கட்டிடம் 700 சதுரடி கொண்ட குடியிருப்பு கட்டிடம் என்பதாலும் மேற்படி கட்டிடத்தினை C மண்டல மதிப்பில் தான் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கட்டிடத்தின் பரப்பளவுகளின்படி தான் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது.தோராயமாக சொத்துவரி விதிப்பு செய்யப்படவில்லை.

iv) திருமதி.ப.மகேஸ்வரி என்பவருக்கு சொந்தமான கட்டிடத்தின் தரைத்தளத்திற்கு விதிக்கப்பட்ட சொத்துவரி விதிப்பு சிறப்பு அறிவிப்பு (Special Notice of Property Tax. New Assessment or Amendment) 21.10.2017-ல் மனுதாரருக்கு முறையாக சார்பு செய்யப்பட்டுள்ளது.

v) மனுதாரர் திருமதி. ப. மகேஸ்வரி வழங்கிய ஆட்சேபனை மனுவிற்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.3097/2018/அ1, நாள்.25.10.2018, ந.க.எண்.2013/2018/அ1, நாள்.07.11.2018 மற்றும் ந.க.எண்.1931/2018/அ1, நாள்.24.04.2019, கடிதத்தின் மூலம் உரிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

vi) திருமதி.ப.மகேஸ்வரி தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, கீழ் கோரப்பட்ட தகவல்கள் அனைத்தும் முறையாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

vii) மனுதாரர் திருமதி.ப.மகேஸ்வரி வழங்கிய ஆட்சேபனை மனுவிற்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2013/2018/அ1, நாள்.07.11.2018 இல் சொத்துவரி விதிக்கப்பட்டதற்கான உரிய விளக்கம் அளிக்கப்பட்டும் இந்நகராட்சியால் வழங்கப்பட்ட கட்டிட அனுமதி உத்திரவு நகல் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுநாள் வரை மேற்படி கட்டிடத்திற்குண்டான கட்டிட வரைபட நகல் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் 25.11.2019 ஆம் நாள் நேரடி விசாரணையில் மேற்படி கட்டிடத்திற்குண்டான பத்திர நகல், கட்டிடவரைபட நகல் மற்றும் அதன் தொடர்புடைய ஆவணங்களுடன் ஆஜராகும்படி தெரிவிக்கப்பட்டது. ஆனால் மேற்படி விசாரணையின் போது மனுதாரர் எவ்வித ஆவணங்களும் நகராட்சியில் சமர்ப்பிக்கவில்லை. மேலும் திருமதி. ப. மகேஸ்வரியின் கட்டிடத்திற்கு சொத்துவரி விதிக்கப்பட்ட கணக்கீட்டு விவரம் நேரடியாக மனுதாரருக்கு எடுத்துரைக்கப்பட்டது.

viii) திருமதி.ப.மகேஸ்வரியின் கட்டிடத்தின் பரப்பளவுகளின்படியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன்படி முறையாக சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது.

ix) திருமதி. ப. மகேஸ்வரி அவர்களின் பழைய கட்டிடத்தின் தரைதளத்திற்கு சொத்துவரி விதிப்பு எண். 020/005/00312க்கு சொத்துவரி அரையாண்டுக்கு ரூ.225/- என நிர்ணயம் செய்யப்பட்ட சொத்துவரியினை செலுத்திவந்துள்ளார். அதன் பின்னர் தனது பழைய கட்டிடத்தினை இடித்து அந்த இடத்தில் புதிதாக 700 சதுரடியில் கட்டிடம்

கட்டப்பட்டுள்ளதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 117ஏ வின்படி சொத்துவரி அரையாண்டிற்கு ரூ.777/- என 2014-2015 இரண்டாம் அரையாண்டு முதல் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரரின் கட்டிடத்திற்கு மறு அளவீடு செய்யப்பட்டு 2014-2015 இரண்டாம் அரையாண்டு முதல் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதை மறுபரிசீலனை செய்ய கோரியதை ஏற்று திருமதி. ப. மகேஸ்வரி அவர்களின் கட்டிடத்திற்கு விதிக்கப்பட்ட சொத்துவரி 2014-2015 இரண்டாம் அரையாண்டு முதல் 2016-2017 முதல் அரையாண்டு வரை ரூ.3108/-க்கான கேட்பு நீக்கம் செய்யப்பட்டுள்ளது.x) திருமதி. ப. மகேஸ்வரி அவர்களின் கட்டிடத்திற்கு 19.10.2017ல் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டதற்கான சிறப்பு அறிவிப்பு (Special Notice of Property Tax. New Assessment or Amendment) 21.10.2017 ல் சார்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சிறப்பு அறிவிப்பில் மேற்படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டது தொடர்பாக ஆட்சேபனை ஏற்பட்டால் சிறப்பு அறிவிப்பு கிடைக்கப்பெற்ற முப்பது / அறுபது தினங்களுக்குள்ளாக நிர்வாக அதிகாரியிடத்தில் புனர்விசாரணை மனு கொடுக்கலாம், எனவும் மேற்படி நாட்களுக்குள் ஆட்சேபணை செய்து கொள்ளாதபட்சத்தில் சொத்துவரி விதித்திருப்பது முடிவானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. திருமதி. ப. மகேஸ்வரி அவர்களின் கட்டிடத்திற்கு விதிக்கப்பட்ட சொத்துவரியினை ஆட்சேபனை செய்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் இந்நகராட்சியில் மனுதாரர் மேல்முறையீடு செய்யாத காரணத்தாலும் மேற்படி சொத்துவரியினை மாற்றி அமைக்க இயலாத நிலை உள்ளது.

மனுதாரரின் புகாருக்கு மேற்கண்டவாறு விளக்கத்தை அளித்த நகராட்சி ஆணையர் அவர்கள் உள்ளாட்சி நிர்வாகமானது சொத்துவரி, தொழில்வரி மற்றும் குடிநீர் கட்டணம் போன்ற வரி விதிப்பு செய்வதன் மூலம் ஈட்ட கூடிய நிதியினை கொண்டு மக்களின் அடிப்படை வசதிகளான சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள், மழைநீர் கால்வாய், பொதுசுகாதாரம், அம்மா உணவகம், பணியாளர்களின் ஊதியம், கொரோன நோய் தொற்று போன்ற பேரழிவு காலங்களில் மேற்கொள்ள வேண்டிய அடிப்படை பணிகள் போன்றவை பொதுமக்களின் நலன்களுக்காகவே செலவிடப்பட்டு வருகிறது என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

3. மேற்சொல்லப்பட்ட மனு சம்பந்தமாக மனுதாரர் திருமதி.ப.மகேஸ்வரி மற்றும் எதிர்மனுதாரர் மறைமலை நகர் நகராட்சி ஆணையாளர் ஆகியோர் 02.11.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு 25.10.2021 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் ஆணையிடப்பட்டன.

4. இம்முறைமன்ற நடுவத்தில் 02.11.2021 அன்று விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் திருமதி.ப.மகேஸ்வரி அவர்கள் தன்னுடைய வாக்குமூலத்தில் கீழ்க்காணுமாறு தெரிவித்துள்ளார்:-

மறைமலை நகர், கண்ணகி தெரு, எண்.9/26 என்ற விலாசத்தில் அமைந்துள்ள எனது சொந்த வீட்டின் மொத்த அளவு 912 சதுர அடியாகும். அதில் 520 சதுர அடியில் மட்டும் நான் வீடு கட்டியுள்ளேன். மறைமலை நகராட்சி அலுவலர்கள் மேற்கண்ட 520 சதுர அடிக்கு மட்டும் விதிகளின்படி சொத்து வரி விதிக்காமல் மொத்த அளவிற்கும் வரி விதித்துள்ளனர். எனவே, எங்களது குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு விதிகளின்படி Carpet Area –வுக்கு மட்டும் வரி விதிப்பு செய்திட ஆவன செய்திடுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பாக நகராட்சி அலுவலர்கள் யார் மீதும் புகார் அளிக்க விரும்பவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனை தொடர்ந்து மறைமலை நகர் நகராட்சி ஆணையர் விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்காணுமாறு வாக்குமூலத்தினை அளித்துள்ளார்:-

“மறைமலை நகராட்சி கண்ணகி தெரு எண்.9/26 ல் வீடு கட்டியுள்ள திருமதி. ப. மகேஸ்வரி என்பவரின் வீட்டிற்கு சொத்துவரி விதிப்பது குறித்து, மறுபடியும் அறிவிப்பு அளித்து மேற்கண்ட வீட்டினை அளந்து, விதிகளின்படி அதன் Carpet Area–வுக்கு மட்டும் சொத்துவரி விதித்திட விதிகளின்படி நடவடிக்கை எடுத்து மனுதாரரின் குறை தீர்க்கப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

5. இந்நேர்வில் மனுதாரரது மனு, விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம், நகராட்சி ஆணையர் அளித்த வாக்குமூலம் மற்றும் ஆணையரின் அறிக்கை ஆகியவை கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

6. மனுதாரருக்கு உரிய விதிகளின்படி முன் அறிவிப்பு வழங்கி நேரடியாக அளவீடு செய்து மனுதாரரால் பயன்படுத்தப்படும் குடியிருப்புப் பகுதிக்கு விதிகளின்படி உரிய வரி நிர்ணயம் செய்யுமாறு, மறைமலை நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி. ப. மகேஸ்வரி,
9/26, கண்ணகி தெரு,
NHI மறைமலை நகர்,
செங்கல்பட்டு மாவட்டம்,
தமிழ்நாடு.

2) நகராட்சி ஆணையர்
மறைமலை நகர் நகராட்சி
செங்கல்பட்டு வட்டம் (ம) மாவட்டம்,

3) நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

நகல்:
முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
உதவி பதிவாளர்
நகல். இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

08/12/21

செயலாளர்.

5/6

08/12/21